உ

சிவமயம்.

திருப்பெருமணநல்லூர்

திருவெண்ணீற்றுமை

பிள்ளைத்தமிழ்.

23
SHIV

இஃது

நிகமாகம சித்தாந்த சைவசமயாசாரியபீடமாய்

விளங்காநின்ற

திருவாவடுதுறை ஆதீனவித்துவான்

திரிசிரபுரம்

மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்களாற்

செய்யப்பட்டது.

மாதவப்பெருமாள் கோவில்

மிராசுதாரர்

சபாபதிபிள்ளையவர்கள்

வேண்டுகோளின்படி

திரிசிரபுரம்

சி-தியாகராச செட்டியாரால்

சென்னையில்

தஞ்சை - சதாவதானம்

சுப்பிரமணிய ஐயரது

வித்தியாவர்த்தனி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

விக்கிரம௵ தைமீ

சிவமயம்.

சிறப்புப்பாயிரம்.

குடம்பகோணம்-காலேஜ்-தமிழ்ப்பண்டிதர்

சாமிநாத ஐயரவர்களால்

இயற்றப்பட்டது.

மாமேவு செஞ்சலச மலர்மேவு தவளவளை
வயங்குதோற்றந்,
தேமேவு பசுந்துழாய்த் தெரியலணி கரியதிறச்
செம்மல்செங்கைப்,
பூமேவு நவநீதம் பொருவுநிறை புனல்வாவி
புடைசுலரவித்,
தூமேவு வளம்புணர்ந்து துலங்குமெழி லிலங்குதமிழ்ச்
சோழநாட்டில். (க)

முருக்கலையப் புரிவாயா ரரமியத்திற் பந்தெறிந்து
முடித்தகூந்த,
லுருக்கலைய வாடுதலி னுகுத்தபூந் துகட்குப்பை
யொளிரம்மின்னார்,
திருக்கலைமா மதிமுகங்கண் டுருகியிந்து காந்தத்திற்
செய்செய்குன்றம்,
பெருக்கலைநீ ரறக்கழுவு பெருமணநல் லூரென்னும்
பெருந்தலத்தில். (உ)

ஊற்றிருக்கு மதுக்கமலத் துவந்திருக்கு மயன்முதலா
மும்பரஞ்சுங்,
கூற்றிருக்குங் கருங்களமுங் குளத்திருக்குஞ் செவ்விழியுங்
குளிர்வெண்கங்கை,

யேற்றிருக்கு நெடுஞ்சடையு மேய்ந்தசிவ லோகத்தியா
கேசரோடு,
வீற்றிருக்குந் திருவெண்ணீற் றுமைவேத முடியிருக்கும்
விரைப்பூந்தாளில். (௩)

நீரோறு செஞ்சடில நின்மலனே பதியென்று
நிலவச்சாற்று,
நாரோறு ஞானகலை முதலியநற் கலைபலவு
நன்குதேர்ந்தோன்,
காரேறு மகத்தெனையுங் கற்றோர்சே ரவைக்களத்தோர்
கடையிற்சேர்த்த
சீரோறு மீனாட்சி சுந்தரநா வலரோறு
சிறந்தவன்பால். (௪)

சொல்வளமே பொருள்வளமே துலங்குறுபல் லணிவளமே
தூயபத்தி,
நல்வளமே முதலாய வளங்களெலாங் கவிதொறு
நனிசிறப்புற்
றெல்வளஞ்சேர் தரவியற்றிப் புனைந்தபிள்ளைத் தமிழென்னு
மியற்பாமாலை,
பல்வளஞ்சேர் புடவியிடைப் பரவுறுமா றினிதச்சிற்
பதிக்கவென்று. (௫)

சேவார்பொற் கொடியுடைய சிவபெருமான் குடியிருக்குஞ்
சிந்தையுள்ளான்,
காவார்பூங் கரதலத்தான் கடிகமழ்பைங் குவளையணி
கவினார்தோளான்,
நாவார்பல் கலையுணர்ந்த பெரும்புலவர் பலர்குழுமி
நன்குசொற்ற,

பாவாணா யாறப்ப சுந்தரவேள் புரிந்ததவப்
பயனுய்வந்தோன். (௬)

வாசவனோ போகத்தில் வடதிசைக்கோ னோநிதியில்
வானுலாவுந்,
தேசவனோ வாளொளியிற் செழுமதியோ சாந்தத்திற்
சிவநேசத்திற்,
கேசவனோ வெனப்பலருஞ் சொலவிளங்கி நல்லொழுக்கங்
கிளரப்பூண்டு,
நேசவன்பு பூசியொளிர் தருசபா பதிவள்ள
ணிகழ்த்தக்கேட்டு. (௭)

நான்றோன்று பதியமர்ந்து தண்கருணை யோவாது
தவச்சுரக்கு,
மீன்றோன்று வாள்விழிவெண் ணீற்றுமையாள்பெரும்புகழை
விளக்கவெண்ணித்,
தேன்றோன்று மொழியினையன் புகறனன்றென் றுவகையுளஞ்
சிறப்புற்றோங்க
வூன்றோன்று முடம்பெடுத்த பயனிதனின் வேறெவனென்
றுள்ளத்தோர்ந்து. (௮)

பழுதகல வாராய்ந்து பதிப்பித்து நல்கினனப்
பண்பின்மிக்கான்
கொழுதுவரி வண்டுழக்குங் கொன்றைமா லிகைவேணிக்
குழகன்சீரோ,
முழுதுலகு மெடுத்தேத்தப் புகனுவான் கலைகள்பல
மொழியுநல்லோன்
எழுதரிய பெரும்புகழான் றியாகராசப்பெயர்கொ
ளியல்வல்லோனே. (௯)

சிறப்புப்பாயிரம் முற்றியது.

உ

சிவமயம்.

திருப்பெருமணநல்லூர்த்

திருவெண்ணீற்றுமை

பிள்ளைத்தமிழ்.

பாயிரம்.

பொன்பூத்தமுக்குணப் புத்தேளிர்முதலெனப் புவியகத் தெவருமுணரப் - பொலியொருபிறைக் கோடு மருண்மேனியும்பொழிக போலக் கடாமுநா ளுங், கொன்பூத்தவெண்மையுஞ் செம்மையுங்கரு மையுங் கொப்புளிக்கக் கருணையே - கொழித்தமர் வழித்துணைக் குஞ்சரத்தஞ்சரண கோகநக மாகநக வே, மென்பூத்தகொன்றைச் சடைப்பரன்வலத்து விழி வெள்ளென விடத்துமருவும் - விழிகாரெனச் செய்ய வாயினெழுகுறுமூரல் வெண்ணிலவு தவழு ந்தொறுந், தென்பூத்தவதின்முழுகி மேற்பழுப்பொ ழியுந் திறங்கருதி மூக்கணியெனத் - திகழ்முத்தமே வவமர் மணவைவெண்ணீற்றுமை செழுந்தமிழ்க் க விதழையுமே. (க)

பாழிமிகுவைதிகஞ் சைவந்தழைப்பப் பசித்த ழூத பனவரோற்றைப் - பரவுபரஞானவின் பாலரூச்

செய்யவாய்ப் பரசமய கோளரியைவண், காழிவரு மொருமுத் தமிழ்க்கடாம்பொழிமழ களிற்றைதேவ தக்கொழுந்தைக் - கவுணியக்கன்றைநற் கற்புநிறை பொற்புமலி காதலியொடுந் துதிப்பா, மாழியிறைவற்குவெவ் விடமுதவுதன்பிழை யகற்றியுய் வான்குறித்தாங் - களவில்வெண்பணிலமுந் தரளமும்பவளமு மம்பொன்னு மணியுநாளும், வாழிநெடுவெண்டிரைக் கையேந்திவந்துதூய் வழிபட விளங்குதெய்வ - மணவைவெண்ணீற்றுமை யணங்குக்கிணங்குதமிழ் மாலையுயர் பாலையுறவே. (உ)

பாயிரமுற்றியது.

காப்புப்பருவம்.

திருமால்

மாமேவுபல்லுயிரும் வாழவணைதற்குரிமை மந்தாகினிக் கில்லைநம் - மார்பினுக்கேயுள்ள தென்று குறியிட்டதென மறைகூறுகுறிகடந்தோன், பூமேவு மார்பினெண் முலைக்குறியமைத்துமகிழ் புண்ணியக் கொம்பையெவரும் - போற்றுமணவைத்திருவெண்ணீற்றுமையெனப்பொலி பொலங்கொடியை யினிதுகாக்க, காமேவுபேருலகி லாருயிர்ப்பயிரெலாங் கலிவெப் பொழிந்துதழைவான்- கடையரியதடையிடையி லடைவரியபெரியதண் கருணைமழைபொழியநாளுந், தேமேவுபங்கயச் செல்வியகலொண்கட் செழும்

பரவை யுட்படிந்து - திதலைகொண்டெழுமனையள் கொங்கைப்பொருப்பிற் செறிந்துவளர் பச்சைமாலே. (க)

சிவலோகத்தியாகர்.

தேமலிகடுக்கைநதி யாரறுகுகொக்கிறகு சீறரவு பூமத்த மாமுடிச்சாத்தினர்-தேடுமிருவர்க்கரிய ராகி யுமுணாக்கரிய சீர்கொண்டிமுதனூல்பற்றியாய்பொதுக்கூத்தினர் - தீர்வரியமத்தவினி தாவருளெனப்பல்பல தேவர்பின்விடார்செப்புநீடுதிச்சோத்தினர்-தேரருமிருத்தமக லாதுதரிசித்துவகை சேருமரவோடுற்று வாழ்புலிப்போத்தினர், நாமலிபுகழ்ச்சியை யவாவியடியர்க்குறுதி நாடியவர்பாலுற்ற தீமையைப்பாற்றுவர் - நானெனதெனப்புகலு மூனமதறுத்துயரு ஞானநெறியோர்பெற்ற பேறெனக்கேற்றுவர்-நாமரணடிக்கடிமை யோமெனநினைப்பவரை நாகவிமையோருட்பராவிடத்தூற்றுவர் - நாடுதிரியக்கரருளாளர்மணவைக்கிறைவர் நாதர்சிவலோகத்தி யாகரைப்போற்றுவ, மாமலிகதுப்பினொளி மேயதரளப்பிறைவிண் வாழுமுகின்மேலுற்ற வோர்பிறைக்கேய்ப்புற - வாளவிருமுத்தவட ஞானநிறைவுற்றமுலை மாறில்புகழேயொத்து மீதுறப்போர்த்தெழ-மாமதியகத்தினெழு சீதநிலவொத்துமுக வாய்முதிர்விலாசத்து வானின்மெய்ப்பாற்பொலி - வாரிசமலர்ச்சரண நூபுரமொலித்தெழநன் மாதவர்முன்மேவொப்பிலாவருட்பார்ப்பனி, காமலிபொருப்பின்மகளாய

வனைமுப்புவன காரணிகலாசத்தி பூரணக்கார்க்குயி
ல் - காதலகல்பித்தர்குண மோததுசெய்பத்தர்பிழை
காமருளமேவக்கொ ளாநலச்சூற்பிடி, காவிமலஞொ
த்தவிழி யோவியநிகர்த்தமயில் காணுலகெலாமொத்
த வாவுமெய்க்கீர்த்தியள் - காசில்கலைமுற்றுமுணர்
வோருமுண்மதிப்பரிய காரிகைவிபூதிக்கல் யாணி
யைக்காக்கவே. (உ)

பொய்யாதவிநாயகர்.

கலர்மலவாய்ப்படு பேயருட்சேற்றுமோ கமகல
வேட்டமர் தூயர்மெய்ப்பாற்பொலி, யுலர்தலினுர்ப்
பெரி யாருளக்காட்டிடை யுலவுபொய்யாக்களி யா
னையைப்போற்றுது, மலரமர்சீர்த்திரு மாதர்கட்கார்
க்குயி லடியனாயேற்றிடு பேரளிப்பேட்டன, மலர்ம
லிநீர்த்தடம் வாரியொப்பாப்பொலி மணவைவெண்
ணீற்றுமை யாடனைக்காக்கவே. (௩)

சுப்பிரமணியக்கடவுள்.

உணர்பெரும்புவன வுயிரெனுங்குகையு ளுறை
தருங்குகனை வெள்ளிவெற்பாத்தனு - ளுணரநன்கு
மொழி யுணர்விறந்த பொரு ளுதவிநின்றவருள் வள்
ளலைக்கூர்த்துதி, புணரலங்கலயில் வலனயந்துபகை
பொருதிவென்றவிற லண்ணலைப்பூக்கமழ் - புனம
டைந்திளைய குறமடந்தைமுலை புணருவந்தமயி லைய
னைப்போற்றுது, மிணர்படுங்கனக தருவெழுந்தமல
ரிலகுகொம்பனொன வள்ளிலைச்சூற்படை - யிறைவ

னெஞ்சினினி தமர்பசுங்கிளியை யெழில்கனிந்தமட
வெள்ளனப்பேட்டினை, வணர்நறுங்குழலை மலைமருந்
தையருள் வடிவையம்பிகையை விள்ளிசைப்பாட்டளி
மருவுபைம்பொழிலின் முகிலுறங்குவள மணவையெங்
களுமை யம்மையைக்காக்கவே. (௪)

நான்முகன்.

வலமலியுமத்திரஞ் சத்திரமுதற்பல வயப்படைக்
குப் படையெனும்-வாக்காயுதங்கொண்டு தான்கொண்
டவைதிகநன் மாண்பினுக் கேற்பநாளு, நலமலியும்வெ
ண்மணி வடங்கையிற்றாங்கவெண் ணகையனைய வுருவ
மேனி - நாயகிமணந்துவெள் ளோதிமநடாத்துமொரு
நான்முகக் கடவுள்காக்க,வலமலியுமெண்டோட் பிரானை
ப்புணர்ந்துசே யொன்றீன்ற மோகினியெனு-மொருமா
துமற்றவன் றிருமடைப்பள்ளியகமோவா துறப்புரிந்து,
குலமலியுமனையநா யகனைநீங்காதுமகிழ் கூர்ந்தமர்ந் து
லகம்வாழக் - கொழிக்குமருளம்மையைச் செம்மைநல்
லூர்க்குடிகொள் கோமளக்கிளி மொழியையே. (௫)

இந்திரன்.

முன்னுசுப்பிரமணிய னேமென்றுநன்று மறை
முக்கா லுணாக்கமேவு - முருகனரு மருகனுவா பருகுபு
மெய்கருகுபுகழ் முகில்புரையுமேனி யண்ணன், மின்னு
தன்பின்னெனப் பெற்றுவற்றுதகவுள் வெள்ளவெள்
ளானையூர்ந்து - விண்ணாளுமாயிரங் கண்ணுளு மேனி
யுடை வேந்தன் பரிந்துகாக்க, பன்னுதிருவுதரமொர்

வருந்துதலிலாதண்ட பகிரண்ட முற்றுமீன்ற - பளகறு தனைப்போல மேனையுந்தனையீன்று பாய்புகழ் படைக்கு ம்வண்ண, மன்னுமருள்புரிபசுங் கொம்பைவம்மைப் பொருமதர்த்தமுலைதாங்கியேங்கி - வாங்கிமெலிதருநு ண் மருங்குலைநெருங்குவள மணவைவெண் ணீற்றுமை யையே. (சு)

திருமகள்.

பிறந்தமனையில் வாழ்க்கையிலர் பேதைமாத ரென் னுமொழி - பிழையேயாக மணிவண்ணப் பெருமான்ற னைத்தான் பிறந்தவள, மறந்தமனைவா யாய்ப்பாடி யுழி ப்பால்கரவிற்கவர் சிறுமை-யொழியத்தாபித் துறுவாழ் க்கை யுற்றுமகிழ்மாம கட்பணிவா,மறந்தவாதமழுப் படைக்கைவள்ளற்பெரியோன் றலைமதிதான்-மாருக் கலக்க முறமுனியு மலர்த்தாளெனினு மறத்தொழிலி ற்,சிறந்தசிறியேங் கடைமதிதான் றீராத்தெளிவு பெ றவுவக்குந் - திறத்தினமைக்குந் திருநல்லூர்ச்செல் வக்கொடியைக் காக்கவென்றே. (எ)

நாமகள்.

தன்னுயகன்றன் மேனிநிறந் தனையொப்பாயநி றமலர்மேற் - றங்கல்போற்றன் மேனிநிறந் தனை யொப்பாய நிறமலரு, மன்னுநிறைவெள் ளறிவுடை யேம் வாக்குங்குடிகொண் டமர்கருணை - வண்மை ப்பனுவ லாட்டியிரு மலர்த்தாடலையால் வணங்கு வா, முன்னுநின்ற கங்கைமக ளொடுங்கி யடங்கியே

மாற - வும்பர்பெருமான் றிருமேனி யொருபால்கவ ர்ந்துமமையாமே, முன்னுவனையன்றிருவுள்ள முழு துங் கவர்ந்துள்ளிறுமாக்கு - முத்தமூரற் றிருமண வை முதல்விதன்னைக் காக்கவென்றே. (அ)

துர்க்கை.

மலையாநிற்கும் வெள்விடையும் வானமறைக்குஞ் சிறைப்புள்ளு - மதவெண்பகடுங் கரும்பகடு மானுமீனு மற்றுளவு,மலையாவெனக்கு மெதிரோவென் றுரைக்கு ம் விறலோராண்சிங்க - முகைக்குந்திறலோர் பெண்சி ங்க முள்ளக்குகையு ளுறத்துதிப்பா, மலையார்செறுவிற் கோட்டெருமை யங்கட்கரும்பு கறித்தருந்த-வதன்வா யிருபால் வழிதீஞ்சா றவாவியுண்ணும் பலவண்டர், வி லையாவல்குல் விற்குமினார் மிளிர்வாயூற லுணும்விடனா- விழையுமணவைத் திருநல்லூர் வெண்ணீற்றுமையைக் காக்கவென்றே. (கூ)

சத்தமாதர்.

பறையோதிமமூ மறையுமிமிற் பாழியேறும் பிணை கமும்போர் - பயிலுமயிலு மயிலும்வலி படுபுள்ளரசு ங் கிரியுமொய், யுறைசீயமும்வன் கலப்பையும்வெள் ளொருகைவரையும் வச்சிரமு - முழலும்பேயுஞ் சூல மூந்தம் மூர்திபடைசெய் யெழுமாத, ரிறையோனுள் ளத் தழகொழுக வெழுதிநோக்கு மோவியத்தை - யெ ண்ணில்புவன மொருங்கீன்று மிளமைவளமைப் பசுங் கிளியை,மறையோவிடும்பொற் றிருவடியென் மனத்து

ம்பதிக்கு மனத்தைநகு - மணநல்லூரின் வெண்ணீற்றுமயிலைப் பரிந்துகாக்கவே. (க0)

சீதரன்மலர்த்தவி சிருக்கையனிவர்க்கரிய வொப்பற்றமெய்ச்சோதி பாதியுருவிற்பொலி - தேவியையுருக்கிளர் முருக்கிதழிதழ்க்கிளியை யெப்பற்றுமற்றருண் மேவியவருக்குறு, காதரமறுத்தவர் பவக்கடல்சுவற்றிமகி ழப்பெற்றிமிக்காளை மூவிருமுகத்தொரு - காளையைமதக்கவு ளுடைக்கயமுகத்தமர ளைப்பெற்றநற்றுயை மேதகுகுணத்தியை, யோதரதநச்செழு வடத்தொடொளிர்முத்தவட முற்றுச்சிறப்பேறு ஞானவமுதக்கட-லூறுகலசத்துணை முலைத்துடியிடைக்கொடியையற்புக்கினிப்பாளை யாரருளொருத்தியை, யாதரமிகப்பெருமணத்துமெமனத்துமமர் முத்திக்குவித்தாயதாளுடையசத்தியை-யாதவருருத்திரர் மருத்துவர்வசுக்களெனு முப்பத்துமுக்கோடி தேவர்கள்புரக்கவே. (கக)

காப்புப்பருவ முற்றியது.

செங்கீரைப்பருவம்.

நீர்பூத்தமுப்பத் திரண்டறமுமோம்புபெரு நிறைவின்மேனோக்கிமலரா - நீதிகீழ்நோக்கியே மலர்தலென்றியாவரு நிகழ்த்துநின் னிருகைமலரு, மேர்பூத்தபுவியிற் பதித்தொருமுழந்தா ளிருத்தியொர் முழந்தாளெடுத் - திரவிமண்டலமென்ன விருகுதம்பைக்குழைக

ளெங்கும்வில் .வீசியாடத், தார்பூத்தமுச்சியிற் கட்டி விடுசித்திலத் தண்மணிச்சுட்டியுநலந் - தழையுநுதலி ற்பொலிவெண் ணீறுமொண்டிலதமுந் தளவனையகு று மூரலுஞ், சீர்பூத்தவெண்ணிலவு வீசியாடக்கௌரி செங்கீரை யாடியருளே - திருப்பெருமணத்தம ரருட் பெரு மணச்செல்வி செங்கீரை யாடியருளே. (௧)

பேசுபுகழ்சால்பெரும் புவனத்திலாண்மகப் பெற ல் சிறப்பென்றுமற்றைப் - பெண்மகப்பெறலத் துணைச் சிறப்பன்றுதுயர் பெற்றதொப் பாகுமென்று, மாசுபடு துன்பமே பெண்ணுருவ மாயெந்த வைப்பினும் வருவ தென்று - யதிக்கிறெரு மகவுமகவாவென்று மிங்ஙன ம் வகுத்துரைப்பார்களோடு, கூசுதலிலாதக மலர்ந்தா ண்மகப் பெறுதி குறைவுதபவென்றுசிமுற்- கூறுநருமு ள்ளநாண் கொள்ளவெள்ளப்படாக் குவடுவானணவ வோங்குந், தேசுமலிபனிமலைக் கொருபுதல்வி யாயவு மை செங்கீரையாடியருளே, திருப்பெருமணத்தம ரரு ட்பெரு மணச்செல்வி செங்கீரையாடியருளே. (௨)

ஞ்தையலரமாதர்முதல் யாருமோகித்துத் தழீஇக் கொளாத் தடைகருதியோ- தாமேவிரைந்தின்னு மோகி னியைமுன்போற் றழீஇக்கொளல் விலக்கெண்ணியோ, வையமிசையவரிடைத் தான்கொண்ட வார்வத்தைமன் னுயிர்க் கறிவிக்கவோ-வயங்கருவமேற் றிவ ரியங்குருவம ற்றெனு மறைப்பொருளை வெளிசெய்யவோ,வுய்யநெறி தருசைவ சித்தாந்தமோதுமுடி பொன்றியொன் று

மையிற்றென்- றுணர்த்தவோவுணர்வரிய வுணர்வுருவ மாகியெம் முணர்வொழித் துணருமொருவன், செய்ய திருமேனியொரு பாதியமர்பைங்கிள்ளை செங்கீரை யாடியருளே- திருப்பெருமணத்தம ரருட்பெருமணச்செல்வி செங்கீரை யாடியருளே. (௩)

நிறைசுகுணமருவுநம் மிருகண்மலரிலமென்று நினையாம லொன்றழிக்கு - நிலவுநங்கையமரு மலரொன்றுநினையாம னிதமுநிக ழொன்றழிக்கு, மறைபுகலுநங்காமர் மெய்யிலொன்றிரவுபகன் மாறுதவெப்புறுத்து - மற்றென்றுமாற்றவ ளொடுங்கூடிமற்றதை வயக்குமிவையன்றியின்னுங், குறைவரியவுவளகத் தும்புரூஉநாணநாங் கொளவிரண்டுங் குடிகொளுங் - குலவிவற்றின் றிறமை யென்னையறிவாமென்று குன்றுமாறிருகதிரையுஞ், சிறைசெய்ததெனவிறை முகக்கண்புதைத்தமெபுண்செங்கீரை யாடியருளே- திருப்பெருமணத்தம ரருட்பெருமணச்செல்வி செங்கீரை யாடியருளே. (௪)

பொருந்துபசியால்விழி யிரண்டும்பிசைந்தழு புலிக்குருளை யொன்றுவப்பப் - பொங்குபாலாழியை யழைத்துக்கொடுத்தசிவ புண்ணியன் புகழ்விளர்ப்ப, மருந்துநல்விருந்திஃ தருந்துகபொருந்தவென மறையுணர வரியபெரிய - மாதேவன்வின்மணிக் குன்ற்தழைசெவிக்கண் மறைத்தமிழ் நிறைத்தூட்டுமா, குருந்துமழகளிறெளி விளக்கெனச்சண்பையிற் குலவுபர சமையசிங்கக் - குருளையுளுவப்பமெய்ஞ் ஞானவின்பான்முன் கொ

டுத்தபைங் கோலமயிலே, திருந்துநலருந்தவ ருளம்பு கு விளக்கமே செங்கீரை யாடியருளே - திருப்பெருமண த்தம ரருட்பெருமணச்செல்வி செங்கீரை யாடியருளே.()

வேறு.

சூழியமுஞ்சிறு சுட்டியுமவிட்டொளிர் சோதி விரிந் தாடச் - சூடுதுதிச்செவி நீடுங்குழையுந் தோடு மசைந் தாட, வீழியவாவுசெவ் வாயினெழுங்குறு வெண்ண கை நிலவாட - வெள்ளியபிறைநுத லென்பதுமெய்யெ ன வெண்ணீற் றொளியாட, வாழியவாழிய வென்றுமு ன்னின்று வழுத்தும் பேரடியார் - மாறுவன்பெனும் வாரிகுடைந்து மகிழ்ந்தவர் சன்மமெனு, மாழியவா ழிசுவற்றுமடப்பிடி யாடுக செங்கீரை - யல்லூர்பொழில மை நல்லூரொழிலுமை யாடுக செங்கீரை. (சு)

நிறைதருமம்பல வுறைதருகரமலர் நிகழ்சிறு வண் டாட - நிலவெழுதிருமுக மதிவாயூற னிரம்புஞ் சுதை யாடப், பொறைதரு கருணையின் முழுகியகயல்கள் பொ லிந்து புரண்டாடப் - புவனம்பலவு மடங்கியவுதரம் பொற்பு மலிந்தாடக், கறைதருகண்டர் கருப்புவின்மார ற் காய்ந்தருளத் தோர்ந்து - களைதருநும்வலி காண்கு வலின்னே காண்மினென் றசைப்பதுபோ, லறைதரு சென்னி யசைந்தாடத்தனி யாடுக செங்கீரை - யல்லூர பொழிலமை நல்லூரொழிலுமை யாடுக செங்கீரை. (எ)

விண்ணலைபிறையு நிறையுந்துறையும் மேவிய ச டையாட - மிளிர்பொன்னுடைய னேத்துந்திருவரை

வெம்புலி யுடையாடக், கண்ணலைநீரொடு நெக்குருகன்பர்கள் கைகள் குவித்தாடக்-காமருகொன்றையொடுந்தலைமாலை கலந்து புயத்தாடப், பண்ணலையாம லெழுப்பிசைவல்லவர் பாடிசை யூடாடப் - பதினாலுலகு மசைந்தாடக்கழல் பற்று சிலம்பாட, வண்ணலைமன்றிடை யாட்டுஞ் சூட்டன மாடுக செங்கீரை - யல்லூர்பொழிலமை நல்லூரொழிலுமை யாடுக செங்கீரை. (அ)

வேறு.

இகழ்தலிறவமுயல் பவர்வினைநினைமு னிகந்தேகின்றார்யா - மினையமுனடிமைய மருள்கெனவிமையவரொன்பா ரன்பாரா, யகழ்மலமெனவனு தினமுறையிடவடி யன்பா னன்றேயா - யருண்மறையிடையொழிவதுதவிர்வகைபொழி யஞ்சேருங் காரோ, புகழ்மிகுகவுணிய மதலைமுனமுகை தவிர்ந்தார்வங் கூர்சீர் - புனைதரனைதரு மமுதுதவியமுலை நங்காய் செங்கேழே, திகழ்பவர்திருவுரு வொருபயலமர்மயில் செங்கோ செங்கீரை - திருவளர்மணவையின் மருவளர்குழலுமை செங்கோ செங்கீரை. (கூ)

வேறு.

வேலைமருட்டிய வாள்விழியற்புத நங்காய்சந்தாகிமேருவளைத்தவர் மார்புதுளைத்த தனம்பூசுந்தாயே, பாலையினித்தெழு தேனையகற்றுசொல் கொண்டாய் வண்டாயும் - பான்மைமலர்க்குழ லாய்மலைபெற்ற மருந்தே செந்தேனூர், சோலைநலக்கிளியே யமுதொத்த கரும்பே செம்போதே - சூடுபவர்க்கிக லாயவொழித்தவர்

தம்பா லொன்றீவாய், சேலையெடுத்தகை வேளைநிறுத் தினள் செங்கோ செங்கீரை - சீர்மணவைப்பதி வாழும டப்பிடி செங்கோ செங்கீரை. (௰)

செங்கீரைப்பருவ முற்றியது.

தாலப்பருவம்.

வாங்குங்கொடி நுண்ணுசுப்பொசிய வார்க்குங்கும வன் முலைசுமந்த - மடவநடை மங்கையர்நறிய மாலைக் குழல்கட் டவிழ்க்கவது, தாங்கும் விரைமென்றுகள்வீ ழ்ந்து தவழ்ந்தம்மடவார் முலைகழித்த-சாந்தும்புழுகு ங்குங்குமமுந் தணவாதழுந்து சேருகித், தேங்குந்தி ருவீதியிற்படிந்து செறியுமீரம்புலர்த்தலினத் - தெரி வைமாரு மைந்தர்களுஞ்சிந்தைக்கவற்சி யறுத்தியங்க, வோங்குந்திருவத் தமிழ்மணவை யுறைவாய்தாலோ தாலேலோ-யுலகமுவக்குந் திருவெண்ணீற் றுமையே தாலோ தாலேலோ. (க)

வண்காலென்ன வாயென்ன வாய்க்காலெனக் கால் வாயெனப்பேர்- மருவிமாறு வனங்கொணமை மானநல்லூர் பெருமணம்வா, னெண்காநல்லூர்ப் பெருமணமே ரோய்பெருமண நல்லூரொன் - றிலகு பெயர்பூண் டுறுவனமேய்ந் தென்றும்விளங்கு மிங்ஙகனைத், தண்காலறிஞர் பலர்குழுமித் தவாதுசூழ்ந் து மருவுதலாற் - றுவாநாமு மெஞ்ஞான்றுந் தவா

துசூழ்த றகுதியென,வொண்கால் பலசூழ் சிவலோ கத் துறைவாய்தாலோ தாலேலோ -வுலகமுவக்குந் திருவெண்ணீற் றுமையேதாலோ தாலேலோ. (உ)

காரார்கலிநீர் முகந்தெழுந்த கமஞ்சூற்கொண்டல் கருக்கலங்கக்-கலைவான் மதியத் துடல்போழக் கற்பத் தருவின் கழுத்தொடிய, நீரார்தடத்துத் தகட்டகட்டு நெடியவாளை மேற்பாய - நிகழ்கார்மேதி படிந்துழக்கி நெல்லின்கற்றைறக்கதிர்மேய்ந்து, சீரார்நறுந்தா மரைகு தட்டிச் செங்கட்கரும்பு கறித்தருந்தித்-தேமாநிழலிற் பேருணவு செறித்துண்டிடலே பொருளெனக்கொ, ளோராார்போலத் துயின்மணவை யுறைவாய்தாலோ தாலேலோ - வுலகமுவக்குந் திருவெண்ணீற் றுமை யேதாலோ தாலேலோ. (ந)

நிலவுதமைநன் கினிதுயிர்த்த நிலமாகியநற் றுய்மகி ழ-நிரம்புபயமூட் டுபுவளர்த்து நிகழ்காரரயசெவிலித் தாய்,குலவுபசிதீர் தரவுணவு கொள்ளுங்கலத்தி னுவர் விரவுங்-கொள்கைதீ தென்றதுகடிவான் குறித்தபொ ழில்கள் பலவுநிறை, பலவுமினிய தேமாவும் படர்நெட் டிலைய கதலிகளும் -பண்பினுயிர்த் தகனிச்சாறு பாய்ச் சிநிற்ற லாற்றிசைபோ, யுலவுபுகழ்சால் வள்மணவை யுறைவாய்தாலோ தாலேலோ-வுலகமுவக்குந் திருவெ ண்ணீற் றுமையேதாலோ தாலேலோ. (ச)

கத்துந்தரங்கக் கடலெழுந்து கழியின்வழிவந் தி ழிவிலழல்-காலுமொளியுங் கருகவொளி காட்டுந்துகிரு

ம் வளையின்ற, முத்தும்பரப்ப வதற்கெதிரோ முகில்வந் துறங்கு முயர்பொழில்சண் - முனிவின்றேற்றுக் கனிவி னொடு முகந்துபரிவர்த்தனை செயல்போற், கொத்துமலி யும் பைங்கமுகின் குலைச்செம்பழமும் வெண்முகையுங்- கொட்டிநிற்ப வதுகண்டு குளிர்வானுதி யெவ்வுலகு, மொத்துநவிலும் புகழ்மணவை யுறைவாய்தாலோ தா லேலோ - வுலகமுவக்குந் திருவெண்ணீற் றுமையேதா லோ தாலேலோ. (ரு)

வேறு.

கருணைத்தும்பி வழிந்துபாந்த கடைக்கட் செந்தே னே - கடையேன்மூல மலத்தைவிளர்க்கக் காணுங் குழலமுதே, மருமலிபைந்துள வத்தொடை மாமுகில் வந்தபின் வந்தமினே - மாருவன்ப ருளத்துமுளைத்து வளர்ந்தெழு பைங்கொடியே, பொருவருபைங்கிளி தங் கியசெங்கைப் பொற்புமி ரோவியமே - புயறவழ்சிமயத் திமயப்பிடியே பொலிமலர் மாளிகைவாழ், தருணம டந்தையர் தாழுங்குயிலே தாலோ தாலேலோ-தண் ணியமணவைப் புண்ணியமயிலே தாலோ தாலே லோ. (சு)

உழைதருகையுடை யெந்தைபிரானுக் குடனொ ழியாதமரா - வோங்குசிருட்டிமு ஞெனாந்தொழிலு மொருங்கு முடித்திடுவாய், குழைதருசிந்தையி னெ க்குருகிக்கசி கொண்டுகைக் கூப்பிடுவார்-குவிதலிலா த வுளக்கோயிற்கிடு கோலம் பொலிசுடரோ, மழை தருமுகிலும் விளர்ப்பவிருண்ட மலர்க்குழலோதி

மமே - மாறுவினையேங் குடிமுழுதாண்டுற வாழ்வி த்திடுமமுதே, தழைதருமறையென் றறைமாங்குயி லே தாலோ தாலேலோ - தண்ணியமணவைப் புண் ணியமயிலே தாலோ தாலேலோ. (எ)

வேறு.

உணர்பவருட்பொலி மழகதிரொத்தொளிர் தா யே நாயேனு - யுழலுமெனக்குந லருள்பொழியுத் தமமாதே போதேவாழ், புணர்முலையற்புத மகளிர் பழிச்சிடு தாளாய் வேளாயே- புவனமனைத்தையு மு தரமடக்கியமாதாவேதாவே, யிணர்மலரிற்குதி கொ ளுநறவொத்தமெய் வாழ்வே தாழ்வேக - வெனவய ன்முற்பல வமரரிரக்குமுனீவாய் பூவாயோர், வணர் கொண் முகிற்குழல் வதிபிறைமெய்க்கவு மாரீதாலே லோ - மணவைநகர்த்தலை மருவுமகத்துவ மானே தாலேலோ. (அ)

வேறு.

வந்திப்பவர்பெரு வாழ்வே தாழ்வே யாழ்வே னும் - வஞ்சக்கொடுவினை நாயே னேயாதேயாயா, மு ந்தித் திருவருள் சாராவோரா வேரார-மொய்ம் புற் றிடவருள் மானேதேனே கோனேயா, நந்திப் பொலிமலை மாதேசூதே யோதேர்சா-னன்றற்புதமு லையாளே வாளேநீளேவே, சிந்தித்திடுவிழி யோராய் தாலோ தாலேலோ - திண்பொற்புரிசை நல்லூராய் தாலோ தாலேலோ. (கூ)

கரியகணுயவை யேவாய் தாலோ தாலேலோ - கருதுனர்பாலொளி யாவாய்தாலோ தாலேலோ,

வரியபெம் மானிடமோவாய் தாலோ தாலேலோ வருள்வரமேபொழி நாவாய் தாலோ தாலேலோ, வு ரியரலாருயிர் காவாய் தாலோ தாலேலோ - வொளி ர்முலையாமத மாவாய் தாலோ தாலேலோ, பிரியமு ருருள மேவாய் தாலோ தாலேலோ - பெருமண மேவிய பாவாய் தாலோ தாலேலோ. (க0)

தாலப்பருவமுற்றியது.

சப்பாணிப்பருவம்.

பார்வளர்மதிக்குழ வெனக்கழுமலத்துற் பவித் தென்பவந் துடைத்த - பரசமயசிங்கமென் றுணா செயும்பாலருப் பவளவாயார் மணத்துக், கார்வள ரொராணவமு மிருவினையுமும்மலக் கட்டுமுட லா திநான்குங் - கருதுசாக்கிரமாதி யைந்துமந்திரமாதி களையாறு நீந்தியெழுமா, ருர்வமுறமூழ்கிப் புறத் தடையுமாசென வகத்தடையு மாசுமண்ணி - யான் றபஞ்சாக்கரப் புனலகன்களாமேவு மாருயிர்க் கரு ள்சுரந்து, சார்வரியவெண்ணீறு நல்குந்திருக்கை கொடு சப்பாணி கொட்டியருளே - தருமணந்தவழு வமை பெருமணங்கமழுமுமை சப்பாணி கொட்டி யருளே. (க)

வேயெனப்பொலிபசுந் தோளுடையமலர்மாத ர் மென்கையங் காந்தடாங்கு - மிளிர்கமலமலர்பகலு

மிரவுமெழுமிருசுடர் விராவுறவிழுங்கு மரவ, மாயெ னப்பொலிகருணை யம்மான்றிருக்கையொ டளாவுங் கெளிற்று மூல - மன்புபுரிவழியடியர் பவவாரிமுழு மையு மலைத்துச் சுவற்றுவடவை, சேயெனப்பொ லிவளைக் கிழவன்விழிவளருந் திருந்தலர் படுத்தவ மளி - தெய்வவறமுப்பத்தி ரண்டையும்வளர்க்குநற் செம்மையான்மிக்க செவிலித், தாயெனப்பொலிநின் கை மலர்முகிழ்த்தம்மை யொரு சப்பாணிகொட்டிய ருளே - தருமணந்தவழவமை பெருமணங்கமழுமு மை சப்பாணி கொட்டியருளே. (உ)

குழைதரச்சுவைமதுப் பொழிதண்டுவாங்கிக் குலாவுஞ் சுருப்புநாணங் - கூட்டியதின் மலரொன் று நாட்டிவலிகாட்டியெதிர் கொற்றவேள் பொற்ற காமர், விழைதரப்பொலியுருவ முற்றுமழல்பற்று மொரு வெவ்விழிக் குணவுசெய்த - மெய்யர்சிவ லோகத்தியாகர்பனிமால்வரை விருப்புறு மணப்பந் தரி, னிழைதரத்தக்கவிடை யொசியவனமுலைசுமந் திணர்மலர்க் கொம்பினிற்கு - மேக்கெழினினருகுற் று மறைமுழங்கப்பல வியங்கலிப்பப்பல் புவனந், தழைதரப்பற்றுகைத் தாமரைமுகிழ்த்தம்மை சப் பாணி கொட்டியருளே - தருமணந்தவழவமை பெ ருமணங்கமழுமுமை சப்பாணி கொட்டியருளே.(௩)

செய்யகமலம்பொருவு மென்பதுதிறம்பச் செ யற்கைச் சிவப்பெழுந்து-செறிதரக்கன்றுமென் றெ

ண்ணுதுபதிமுனுஞ் சேர்ந்தமிதராதவிவைகள், வை யமிசையிவர்முனஞ் சேர்வதோவென்றுளம தித்தி டா தண்டரண்ட - மாண்டபகிரண்டமுற் றீன்றளிக் குங்கருணை வாஞ்சைசுறற்று யாதலான், மையவிரு மெங்கள்கண் மலரோடுவதனமு மலருமாறுளமிரங் கி - வளமொழிப்பைங்கிள்ளை தாங்கியதனிறகுதை வந்துநந்துவகை யுறுநின், றையலமர்கைம்மலர்முகி ழ்த்தம்மை யம்மையொரு சப்பாணி கொட்டியரு ளே- தருமணந்தவழவமை பெருமணங்கமழுமுமை சப்பாணி கொட்டியருளே. (ச)

உரவுமறைபாடுசிவ லோகத்தியாகவொன் று ளாசெய்நின் கொழுநர்மகிழ - வுள்ளங்கசிந்துநெக் குருகியுருகிக்குழைந் தோங்குதுதிபல பாடுவோங், கரவுதவிர்மூத்தநின் மகற்கினியமோதகங் கைதொ டப்பல படைப்போங் - கருதிளமகற்குநறு மான்ம தஞ்சாந்தங் கருப்பூர மப்பிவிடுவோம், பரவுமந்தா கினி நினக்கடிமைசெய்புமொரு பாவையென்றே நாட்டுவோம் - பரிந்துனைத்துதிபுரிதல் சொல்லவே ண்டுங்கொலெம் பாலருள்சுரந்துமிக்கா, தரவுபெரு கக்கர முகிழ்த்தம்மையம்மையொரு சப்பாணி கொ ட்டியருளே - தருமணந்தவழவமை பெருமணங்க மழுமுமை சப்பாணி கொட்டியருளே. (ரு)

வேறு.

வேட்டுப்புயறவழ் சிமையத்திமையவி லங்கலி டைத்தோன்றி-விண்ணவர் மண்ணவ ரெண்ணுமோ

ர்வெள்ளி விலங்கலிடைத்தனியே, பாட்டுப்பிரமர முளருங்கொன்றைப் பைந்தார்வேய்ந்துலவும்-பண் பார்பிரணவ குஞ்சரமேவிப் பாரொடு விண்வெருவ, மோட்டுத்திறல்கொ டுலாவிருகோட்டொரு மூரிச் சினவேழ - முனைமுதன்மாய்ந்தொரு வரைபோற்சா ய்தர முனிவிற்பொரு மொருவெண், கோட்டுக்களிறு பயந்தமடப்பிடி கொட்டுக சப்பாணி-குணவைப்பெ னவமை மணவைப்பதியுமை கொட்டுக சப்பாணி. ()

தமரத்திரைபடு தொடுகடலுலகிற் றண்ணிய பிரமபுரந் - தழைதருவேணு புரப்பெயர்பூணத் தா வில் வரங்கொண்டே, யமரர்க்கதிபதி முதலியர்திரு வனை யார்புகழொடு கூட்டுண் - டண்டமடங்கநடாவு கொடுங்கோ லாளியுமவனிளைய, பமரத்தொடைநெ டு முடிவலியினரும் பன்மைந்தரு மிடையும்-படையு ம்முடையும் படிதடிகடிவடி பயிலயில்வல னேந்து,கு மரக்கடவுளை யீன்றகருங்குயில்கொட்டுக சப்பாணி- குணவைப்பெனவமை மணவைப்பதியுமை கொட்டு க சப்பாணி. (எ)

பிறைமதிநிறைபுன லுறைதருசடிலப் பெருமா னொருமான்வாய்ப் - பெருகொலியொருசெவி யருகு றநிறுவுபி ரானொருபாலமர்வாய், கறைதப மறைமு டி போதுமொர்கிள்ளை கலந்தமர்கைக் கிளியே - க டையேன்குடிமுழு தாண்டுவிரும்பிக் காக்கும் பைங் கொடியே, மறைமுழுவதுமே கலைசெய்தனையணி மா

தே மாதரசே - மலையினுதித்த மருந்தே வெள்ளிய வாணகை யோதிமமே, குறையறவடியவர் பாற்பொலிசுடரோ கொட்டுக சப்பாணி - குணவைப்பெனவருமை மணவைப்பதியுமை கொட்டுக சப்பாணி. (அ)

சிறுமதிநதிபொதி மிடைசடையுடையரி டத்துமடப்பாவாய் - செறிதவர்மனவிருண் முழுதறவவணெளிர் பத்மபதத்தோயே, மறுவறுகதிரொடு மதியுறவுறுமிரு ளொத்தகுழற்கோதாய் - மறுகுறுசிறுகிடை யொசிதரவளரிள முத்த முலைத்தாயே, கறுவொடுமெழுகொடு விடமமிர் துறவிடு கட்கடைநற்றேகாய் - கதிர்விழியெனவொரு தமியனுள்ளொளி முழு கத்தயை வைப்போயே, குறுமுனிதொழுதெழு பனிமலைவருமயில் கொட்டுக சப்பாணி - குளிர் மலிபொழிலெழின் மணவையிலமர்குயில் கொட்டுக சப்பாணி. (கூ)

படவரவச்சுமை முழுதுமுணப்பசி யுற்றவனத்தார் - பதுமமலர்த்தலை யமர்மறைவித்தக ரட்ட திசைப்பாலர், கடவுளர்மற்றையர் முனிவரர்பத்திசெயப்படு மெய்த்தேவே - கமலமலர்த்தலை மகளிர்முதற்பல ரற்புறு கற்பாயே, மடமையறுத்தென திதயமலர்க்க ணிருக்கு மனப்பேடே - மதியமுடித்தவர் நிதியமெனத்த முளத்துற வைப்போயே, குடவளை மொய்த்தசெய் மணவைமடப்பிடி கொட்டுக சப்பாணி - குலவிமயத்தனி வரைவருமுத்தமி கொட்டுக சப்பாணி. (கo)

சப்பாணிப்பருவ முற்றியது.

முத்தப்பருவம்.

கொழுதும்வரிவண் டுழுதுழக்கிக் கொழுந்தே னிரம்ப வாய்மடுத்துக் - குமட்டிக்கவிழ்ந்தாங்கெதி ரொடுக்குங் குளிர்மென்மலர்ப்பூங் குழற்கொம்பே, தொழுதுமழுதும் புகழ்பாடித் துதித்து முருகி யுருகிநிகழ் - தொண்டருளக் கோயிலுக்கமைத்த நூண் டாவிளக்கே சுயஞ்சோதி, யெழுதுமுயிரோவியக் கொழுந்தே யெழுதா வுருவத் திள்ங்கொடியே - யெழுபேருலகு நினைந்துதொழ தெழுகோமளமே யிலவர்கி, முழுதுமிணையி னின்கனிவாய் முத்தந்தருக முத்தமே - முதுசீர்மணவைப் பெருமாட்டி முத்தந் தருக முத்தமே. (க)

நனியாதரஞ்செய் துள்ளுருகி நைந்துகுழைந்து நாத்தழும்ப - நாளும்வழுத்தும் பேரடியார் நலஞ்சாலுள்ளத் தூற்றரும்பி, யினியாநிற்குஞ் சுவையமிழ்தே யேழைத்தொழும்பு பூண்டொழுகு - மெங்கள் குடிக்கு மொருமுதலே யெல்லாவுயிரு மினிதீன்று, கனியாநின்றபேரருளிற் கசிந்துநோக்கி மகிழ் விக்குங் - கரும்பேபுவிமுனுருறுங் கடந்தமுதலி லாமுதல்வன், முனியாதவாவுஞ் செங்கனிவாய் முத்தந்தருக முத்தமே - முதுசீர்மணவைப்பெருமாட்டி முத்தந்தருக முத்தமே. (உ)

விளைக்குமதுரச் செங்கரும்பு விரும்புசுரும்பு நாண்பூட்டி - விரைக்கோறெடுத்த வேளுடலம் விழி

த்தீக்குணவாக் கியதுமறந், திளைக்குங்கொடிநுண் மருங்குல்கவன் றேங்கவீங்கு மிளமுலையு - மிலகுப சிய வேய்த்தோளு மெழில்கொப்புளிக்குந் திருமுக மும், திளைக்குங்காதல் கொடுநோக்குஞ் செய்யசடை வெண் பிறைமுடித்த - தேவதேவன் முகக்கமலஞ் செவ்வேமலர வெண்ணிலவு, முளைக்கும்பவளச் செங்கனிவாய் முத்தந்தருக முத்தமே- முதுசீர்மணவைப்பெருமாட்டி முத்தந்தருக முத்தமே. (௬)

நத்தங்கமழுங்குழற்கோதை நல்லாரறுவர் திருமுலைப்பா - னன்குதெவுட்டவுண்டுபசு நறும்புற்புனற்றெரட் டிலினமர்போ, தத்தங்கமழும் படியெடுத்தாங் கணைத்துமார்பி னுச்சிமோந் - தார்வம்பெருக நோக்குதொறு மருளாற்பெரிய யோகியர்தஞ், சித்தங்கமழுங்கிண்கிணிப்பொற் சிலம்புபுலம்பு சேயிதழ்த்தாட் - டெய்வச்சைவச்சிறுகுழவி திருவாயாறுமுவந்தளிக்கு, முத்தங்கமழுமின்கனிவாய் முத்தந்தருக முத்தமே, முதுசீர்மணவைப் பெருமாட்டி முத்தந்தருக முத்தமே. (௭)

அழியும்புவனச் சிறுவாழ்வு மமரர்புவனப் பெருவாழ்வு - மம்மலாளு மருவருக்கு மார்வம்பூண்டமலபாகர், விழியுமனமுங் குளிர்தூங்க விதிகாணரிய திருவுருவ - மேவியாவி முதன்மூன்றும் விருப்பின்வாங்கி யெவ்வினையு, மொழியும்படிசெய் நோக்காதியொன்றப் புரிந்து சிவானந்த - மூறிப்பெருகித் த

தும்பியெழ வொன்றுமொழிவா ருளங்குளிர, மொழியும்பவளச் செங்கனிவாய் முத்தந்தருக முத்தமே-முதுசீர்மணவைப் பெருமாட்டி முத்தந்தருக முத்தமே. (ரு)

வேறு.

மதிமுத்தம்வீரன்வயி ரக்கழற்காறேய்க்க மண்ணிடைத்தேய்ந்த துயர்வேய் - வருமுத்தமதினெழுந் தழலால்வெதுப்புண்டு மாமைகருகியது செஞ்சொற், பொதிமுத்தம்வன்பகடு காலுழக்கப்பிளவு பூண்டதாலிப்பி வளைமீன் - பொலிமுத்தம்வெய்யபுல வொழியாதுநாறுமொண் பூவையர்களத்து மேவுந், துதிமுத்தமவர்மகிழ்நர் கைபட்டதுக்குண்டு தோன்றுது மறையு மிக்குச் - சுடர்முத்தமாலையி னெரிந்ததிவை வேண்டேந் தொடுத்தபற்பல வுயிர்க்கும், பதிமுத்தமேற்றுமகிழ் நிதிமுத்தமன்னசெம் பவளமுத்தந் தருகவே - பல்லூர்விரும்புமெயி னல்லூரரும்புமயில் பவளமுத்தந் தருகவே. (சூ)

அடரிருட்பொலிவழிய வாயிரங்கதிர்விரித் தாதித்தனுதய மெழுமோ - ரருவரைச்செந்தூர வருவியிற்பன்னூறு மாழ்ந்தொளி பரப்புமணியுஞ், சுடர்விரித்தெழுவசிச் சுதரிசனமுந்தனித் தொல்வளையுமேந்து மொருவன் - றுழாய்ப்படலைமறுமார்பி னுக்கழகு செயும்விலைத் தொகையிலா வரியமணியு, மிடர்கெட்த்தகுவொடு சதகோடிகொண்டுபொரு மேந்தலூர்

23 JUN 1914 SRI ... ALL

மணியுமற்று - மியம்புமைந்தலைநாக மணியும்யாம் வேண்டல மெமக்கம்மைசெந் துகிரினைப் படர்ச டைதரித்தபொல் ஸ்ரீமணியவாவுநின் பவள முத்தந் தருகவே - பல்லூர்விரும்புமெயி னல்லூரரும்புமயில் பவளமுத்தந் தருகவே. (எ)

கரவுதீர்பேரருள் விழிக் குடையுமீனுங் கலந்துப ர ஞானமூறுங் - கதிர்முலைக்குடையுங் களிற்றிகன் மருப்புங் களத்தினுக் குடையும் வளையும், விரவுபாகெ னுமொழிக் குடையுங்கரும்புமெழின் மேயதோட் கு டையும்வேயு - மிளிர்கவானுக்குடையும் வாழையு முகத்திற்கு மேன்மேலு முடையு மதியும், புரவுசா ல்கைக்குடையு நளினமுநறுங்குழற் பொலிவினுக் குடையுமுகிலும் - பொற்புறத்தருமுத்தம் வேண்ட லங்கண்டம் பொலிந்தொளிர நீலம்வைத்த, பரவுமா ணிக்கமொரு பால்வைத்தமரகதம் பவள முத்தந் தருகவே - பல்லூர்விரும்புமெயி னல்லூரரும்புமயில் பவளமுத்தந் தருகவே. (அ)

வேறு.

மறையின்முடியு மெனதுளகமு மனமுளுருக நித்தமு - மதுரமொழியி னினியதுதிசெய் மறுவில டியர் சித்தமு, மறையுமறைவில் கருணைபெருகி ய லையதெறியு மக்கமு - மளவில்பிறவி யுததிசுவற வலர் செய் சரண பத்மமு, நிறையுமழகு பொழியுமுகமு மபய வரத வத்தமு - நிகரில்பிறவு மிலகவமரு நிலவு

மமல வுத்தமி,கறையில்சிமைய விமையமுதவு புதல் விதருக முத்தமே - களையில்வளமை யளவுமண வை முதல்விதருக முத்தமே. (கூ)

வஞ்சமருவு நெஞ்சமருவ வஞ்சிவிலகு சத்தி யே- வம்புதழுவு மென்புனுரைய நம்பியருள்செய் பித்தியே, கஞ்சமருவு மஞ்சன்விறன்மு குந்தன்வெ ளிய வத்தியூர் -கந்தமலர லங்கலணிபு யன்பன் மு றை துதித்துநீ, தஞ்சமெனவு வந்தனையர்மு னின்ற வொளி யொருத்தியே - சங்குகுழையர் திங்கண்முடி யர் பங்கினமர் திறத்தியே, யஞ்சமுலவு நன்செய்ம ணவை யம்பைதருக முத்தமே- யன்பர்மனமு வந்த வரு ளணங்குதருக முத்தமே. (க0)

முத்தப்பருவ முற்றியது.

வாரானைப்பருவம்.

விற்கொண்டவாணுதற் பட்டமுஞ்சுட்டியும் விள ங்கொளிதுளும்பு சூட்டும்-விரைநறுங்குழலிற் கவிழ் த்திடுதகட்டணி விராயசெம்மணியி னொளியுஞ்,சொ ற்கொண்டவள்ளைச் செவிக்கணமர்தோடுமிருதோள் வருடி யாடுநீடு - சோதிக்குதம்பையு மிளஞாயிறுத யஞ் சுரப்பமார் பத்துவயிரக்,கற்கொண்டபணியு மு த்தாரமும்வெண்ணிலாக் கற்றைகால் சந்திரோதயங்- காட்டவிருகைவளை கலிப்பச்சிலம்புகள் கலின்கலி

னெனப்புலம்ப, வெற்கொண்டகளிரடி பெயர்த்துமணவைப்பதி யெழிற்பராபரை வருகவே - யேகர்சிவலோகத்தியாகவொருபாகத் திருக்குமுமையாள் வருகவே. (க)

ஆருறுதத்துவமும் வேதாந்தமுங்கடந் தவிர்வனவின் முழுதுமாளி - யாதிப்பல்வானவரு மாதரிப்பனவுந்தி யன்னமின்னமு முணர்தரா, நாறுறுதங்குமுடி யொண்மதிப்பிறையஞ்ச நகுவனகளங்கமொழி மெய்ஞ்-ஞானயோகியருளங் குடிகொள்வன நைந்துருகி நாத்தழும்பத் துதிப்பார், கூறுறுகாலுமுக் காமலரிடுந்தொறுங் கொண்டுவப்பன வென்றுபல்-கூர்த்தமதியாளர்புகழ் மெல்லடிபெயர்த்தழகு சூலவவிருபத் தாயினே, டேறுறுபுண்ணியமு மணவுமணவைப்பதி யெழிற்பராபரை வருகவே - யேகர்சிவலோகத் தியாகவொருபாகத் திருக்குமுமையாள் வருகவே. (உ)

திங்களரவங்கண்மலி கொன்றைமலர் துன்றுசடைதேடிமுன் கண்டறிதராச் - செஞ்சூட்டுவெள்ளோதி மந்தொடரவாயிரந் தெய்வத்திறத்து நிகழ்வே, தங்கள்பெருகோலமிட் டுத்தொடரநறிய செந்தாமரையுயிர்த்த மாதுந் - தாதுசெறிவெண்சததளக்கமலமாளிகைத் தலையமரு மாதுமிகுபோ, கங்கண்மலிவானகத் தயிராணியும்பல கருங்குழலரம்பைமாருங் - கைகுவித்துத்தொடர மெய்ஞ்ஞானயோக

ரிரு கண்களுங்தொடர விடர்தீர்ங், தெங்கண்மனமு ங்தொடர மெல்லடிபெயர்த்தினி தெழிற்பராபரை வருகவே - யேகர்சிவலோகத் தியாகரொருபாகத்தி ருக்குமுமையாள் வருகவே. (௩)

பன்மலர்முகந்திரு கரங்கொண்டுதூய்நெடும் பனிவிசும்பமரு மடவார் - பணிதோறுமவர்குழல ளாயதரளப்பிறை பதிந்திடத்தோன்று சுவடுங், கன்மலர்மனத்தைவண் கருணைபுரியாய்கொலென் காதற்கிதழகு கொலெனுக் - கற்பனைகடந்தவர் தொழுந்தோறுமவர்முடிக் கட்பிறையை யேற்றலாலே, முன்மலர்தருஞ்சுவடு மேல்கீழுறப்பெற்று மோகநீத் தவருளத்தான் - மூடிடப்பட்டுமைய லாழ்ந்தாருளம்பதிய முழுதுமச் சுற்றுவிலகு,மென்மலருநின்மல ரடித்துணை பெயர்த்துந லெழிற்பராபரை வருகவே - யேகர்சிவலோகத் தியாகரொருபாகத் திருக்குமுமையாள் வருகவே. (௪)

ஆலக்கருங்களத் திறைவருடனீங்கா தமர்ந்துபரையாதி யிச்சை - யறிவுதொழிலாகியுயி ராம்பாசமற்றுய்ய வைங்தொழினடாத்து மயிலே, சாலக்கருங்கொண்டலோ மரகதங்கொலோ தக்கவிந்திர நீலமோ,தழைதரும்பூவையோ வெனுமேனிவாய்ந் தமாதவனுடைத் தங்கையேகார்-நீலக்கருங்கட்டிருக்கோதைமாதொடு நிலாவுகலை மாதுநாளு, நிகழத்துதிக்கும்பெருஞ்செல்வியேகல்வி நேயமிக்கார்வாழ்க்கையே

யேலக்கருங்குழற் செய்யவாய்வெண்ணகை யெழிற்
பராபரை வருகவே, யேகர்சிவலோகத் தியாகரொரு
பாகத் திருக்குழுமையாள் வருகவே. (ரு)

வேறு.

மின்னிப்பொலியுங் கருங்கொண்மூ விளர்க்குங்கு
ழலார் மைந்தரொடும்-விளையாட்டயர வினிதமைத்
த வியன்மாளிகைமேற் செய்குன்றிற்,றுன்னிப்பொ
லியும்படிபதித்த தொகுசெம்பதுமராகமணிச்-சுடர்
மீதெழுந்து வானளவுந் தோன்றநிற்றமிழ்வேதம்,
பன்னிப்பொலியுஞ் சம்பந்தர் பரவுமணத்தி லெம்
பெருமான் - படர்பேரொளியாய் நின்றதிறம் பாரா
ரறியத் தெரிவிக்க, மன்னிப்பொலியும் வளநல்லூர்
வாழ்வேவருக வருகவே, மாறுக்கருணைச் சூற்கொ
ண்ட மயிலே வருக வருகவே. (சா)

மோனமோங்குஞ் சிவயோக முத்தருள்ளமு
மிழாத - மும்மைத்தமிழ்தேர் விரகர்மண முடித்துப்
பெறுபேற் றின்புகழ்போற், கானமோங்கு மறைமு
ழங்கக் கங்குலழிந்து கழிந்தோடக் - கதிர்வெண்ம
தியோடுடுவொளிப்பக் கமலமுகைகண் முறுக்கு
டையத், தானமோங்குங் கூகைதுயர்ச் சலதிமூழ்க
க்கொடிபு வப்பத் - தண்டாதுதய மெழுங்கதிரோ
ன் றடந்தேர்ச்செலவு தனைத்தடுத்து, வானமோங்
கு மதினல்லூர் வாழ்வேவருக வருகவே - மாறுக்க
ருணைச்சூற் கொண்ட மயிலேவருக வருகவே. (எ)

சந்துதவழுமுலையாருந் தாமந்தவழு புயத்தாருந் - தவாதுதழுவு மாளிகையுந் தனிமேனிலையுமாடரங்கு, மிந்துதவழுஞ் செய்குன்று மெழில்கொப்புளிக்கு மரமியமு - மின்பங்குடிகொள் வேதிகையு மிடங்கொண்மணிமுன்றிலுமருகு, நந்துதவழுந் தடம்படிந்து நறும்பூஞ்சோலை யகத்துறங்கி - நகுபேரந்தி மாலையிற்பன் னலஞ்சால்பொதிய வளாயுதித்த, வந்துதவழுந் திருநல்லூர் வாழ்வேவருக வருகவே - மாறாக்கருணைச் சூற்கொண்ட மயிலேவருக வருகவே. (அ)

மூரியெருமைக்கரும்போத்து மோட்டுப் பியலினுகங் கிடத்தி - முடங்கூர்நாஞ்சி லோர்க்காலம் முரியாநுகத்தி னடுப்பொருத்தி, வேரிகடைவாய் வழியிழிய விரும்புமுழவரொறுழிடக்கை - மேழிதழுவமற்றொருகை வெய்யவிரும்புமுட்கோல்கொண் - டாரிதழியாரடியும்வெளி யாமேயென மண்பிளவுபட, வாங்காங்குரட்பியுழுமோதை யம்மபரத்தலாற்பகல்வாய் - வாரிபடங்கும் வளநல்லூர் வாழ்வே வருக வருகவே, மாறாக்கருணைச் சூற்கொண்ட மயிலே வருக வருகவே. (௯)

பணியேவிரும்பு துணிபினர்தம் பற்றேவருக முற்றுணர்ந்த - பரமயோகருடன்பிரியாப் பரையேவருக வவர்புனையு, மணியேவருக வவரினிய வமுதேவருகவவர் திருப்பே - ரருளேவருக வவருளங்கொளனமே வருக வவர்முடிக்குங், கணியேவருக மெய்ஞ்ஞானக் கனி

யேவருக வானந்தக் - கடலேவருக வெங்களிரு கண்ணேவருக கண்ணினுள்வாய், மணியேவருக திருநல்லூர் வாழ்வே வருக வருகவே - மாறுக் கருணைச் சூற்கொண்ட மயிலே வருக வருகவே. (௧0)

வாரானைப்பருவ முற்றியது.

அம்புலிப்பருவம்.

திகழ்தருகடுக்கைமலர் சூடுசிவலோகத் தியாகர்த முடிக் கலத்துட் - சிறந்தவொன்றுயனையர் கண்ணுளொன்றுயனையர் திருமேனியெட்டு ளொன்றுய்ப், புகழ்தருவலத்தவ ரியக்குமறைவாம்புரவி பூண்டதேர்க் காலுளொன்றுய்ப் - பொலிவதன்றியுமனையர் புண்ணியப்பொடியெனப் பொங்குகதிரொங்கு மமிழ்வா, யிகழ்தருபவந்தவிர்த் தருளனையமைப்பல விடத்தினும்போற்றல் செய்வா - யித்தகுசிறப்புணர்ந் துன்னெடுகலந்தாட லெண்ணினு ளெங்கள்வினைமுற், றகழ்தருதிருப்பெரு மணத்தமராருட்பமையோ டம்புலீ யாடவாவே - யகிலபுவனங்கண்முற் றீன்றதாய்காணிவளோ டம்புலீ யாடவாவே. (௧)

எண்ணுமதியினர்மதிக் கடவுளெனநுவலு தற்கேற்பவொண் கலையாளனு - மிரியாததண்மையா ளனுமாயினுயின்னு மிருளிலொளி யோனுமானுய்,நண்ணுமொருபாந்தளொரு புடைகொளினுமொருபுடையி ன

னிலவிளக் காகுவாய் - நாயனார்திருமுடிக் கங்கையிற்ச ங்கையற நாடோறுமூழ்கி யெழுவாய், மண்ணுலகிலள வில்லைபங் கூழ்தழையுமாறருள் வழங்குவாயுனது செய்கை - மதித்துநன்றென்றுட வாவென்றழைத்தனள் வழைத்தடஞ்சோலை முகின்மே, லண்ணுவளமேவுந் திருப்பெருமணத்துமையோ டம்புலீ யாடவாவே - யகிலபுவனங்கண்முற் றீன்றதாய்காணிவளோ டம்புலீ யாடவாவே. (உ)

சுரும்புசெறிகழுநீர் மலர்த்துவாய்நறவமிகு தொகுகமலமலர் குவிப்பாய் - சுகமிகமணந்தவர்க் கின்பமாவாய்துன்ப மாவாய்தணந்த வர்க்குப், பெரும்புவிவிரும்பநிறை வாயதுவெறுப்பநோய் பெற்றார்மெய்போன்று குறைவாய் - பேராழிமிகமுழங் கத்தோன்றுவாயஃது பேசாதடங்க மறைவா, யிரும்புவனமேத்துநடுநிலையொடொரு தன்மையே யெஞ்ஞான்று மெய்திநிலவு - மெங்கள்கருணம்பிகைநி னியன்முழுது மெய்த்துமுள் ளெய்யாரின் வருகவென்று, ளரும்புநலமார்பெருமணத்தமரருட் பனாயோ டம்புலீ யாடவாவே - யகிலபுவனங்கண்முற் றீன்றதாய்காணிவளோ டம்புலீ யாடவாவே. (௩)

சங்கநகவூரும்வெண் டிரையெறிதடங்கட றவாதேயெழுந்து பொங்கத் - தண்கலைகண் முழுமையு நிரம்பிமுழுமதியெனத் தழைதர வெழுந்தபோது, பொங்கனகமாருநங் திருமுகமெனக்கருணை பூத்தினி தெழுந்த

தென்றும் - பொலியுருப்பாதியா யெழுபோதுதிருநுத
ற்பொலிவுற் றெழுந்ததென்று, மங்கனகவுருவின்றி
மறைதரும்போதுந மருங்குலே யொத்ததென்று - ம
கிழுமாதேவியிவள் வம்மெனக்கூவினீ வாராதிருப்ப
தழகோ, வங்கனகமணிமாளிகைப் பெருமணத்துமை
யோ டம்புலீ யாடவாவே - யலகில்புவனங்கண்முற் றீ
ன்றதாய்காணிவளோ டம்புலீ யாடவாவே. (௪)

பேராழிசூழ்திருக் காழியிற்பாலுண்ட பிள்ளை
யார் திருமணத்துப் - பெருகவந்தடையுமா தவ
ரொடுங்கூடிப் பிறங்கவந்தாயல்லையன், ஞோராழி
யேழ்புரவி வையத்திவர்ந்திரு ளொருங்கற முருக்கு
மொருவ-னுன்னையொத்தவனொரு களங்கமுமிலான
ஃது ணர்ந்திலான் போற்றிரிதலென், பாராழிவட்ட
ம் விணுவப்பவின்றேனும் பரிந்திங்கு வந்தாயெனி
ற் - பாடுசானின்பெருமை பாடவெளிதாகுங்கொ
ல் பாசாங்குசத்திஞேடு, மாராழிசங்கங்கொள் கைப்
பெருமணத்துமையோ டம்புலீயாடவாவே - யலகி
ல்புவனங்கண்முற் றீன்றதாய்காணிவளோ டம்புலீ
யாடவாவே. (௫)

உலகுபுகழ்பஞ்சாக் கரப்பெருந்தீர்த்தமென் ஞெ
ன்றுண்டுமூழ்கிஞேருக் - கொழியாதபிணிமுழு தொ
ழிப்பததன்மான்மிய முரைக்கரிது முகமனன்று, வில
குமிஃதன்றியுங் கூபவடிவாய்க்கங்கை யென்பதொன்
றுண்டதன்சீ-ரெம்மஞேர்பேசுதற் குரியதரியதுபெரிய

தித்தலப்பெருமை கண்டாய், விலகுகொடுவஞ்சமு டை நெஞ்சரல்லாரொன்று மேவரியவித்தலத்து - விளை யாடல்கருதிவா வென்றிறைவியேயுனை விளிக்கநீ செய்ததவமெ, னலகுதவிர் பெருவளம் பொலிபெருமண த்துமையோ டம்புலீ யாடவாவே-யலகில்புவனங்கண் முற் றீன்றதாய்காணிவளோ டம்புலீயாடவாவே. (௬)

சிறந்தமாணுக்கனீ யேயென்றுபலருஞ் சிரிக்கவா சாரியன்றன் - றேவியிளவனமுலை ஞெமுங்கவகன்மா ர்பிற் றிளைத்துநீங் காதபழியோ, டுறந்தபேரரியவெ ங் கவலையுந்தவலிலா வொருசாப மும்பூண்டுளா-யொ ழியாதுதக்கனிடு சாபத்தொடக்குண் டுழன்றுவா ன லைதறவிரா, யிறந்தமாமலமுடைய ரோயடையுமித்தலத் தெய்தியிக் கருணும்பிகை - யிணையிலருளேக்கமும் பெறினினக்கெத்துயர மெய்துமினை யாவர்நிகர்வா,ரற ந்தவாதோங்கும் திருப்பெருமணத்துமையோ டம்பு லீ யாடவாவே-யலகில்புவனங்கண்முற் றீன்றதாய்கா ணிவளோ டம்புலீ யாடவாவே. (௭)

வையமுழுதுய்யவொரு வாவியங்கணாநின்று வா ய்மலர்ந்தழுத பிள்ளை - மதுரமிகுசெவ்வாய்க் கருங்கு ழற்காதலியை மாமணஞ் செய்தனாென்று, செய்யமலர் மீதனந் துஞ்சுபஞ்சாக்கரத் தீர்த்தக்கரைக்க ணின்று- சேர்ந்தார்களங்கமுற் றொழியவெண்ணீறுதன் செங்க ரத் தாலளித்தா - ளுய்யவிவள்வாவென் றுரைத்தபடி யேவிரைந் தொருவனீ வந்துசேரி, னுன்களங்கந்தவி

ர வெண்ணீறுநல்காள்கொ லோவிதனை யுணராததெ-னையமனமோவித் திருப்பெரு மணத்துமையோ டம்புலீ யாடவாவே-யலகில்புவனங்கண்முற்றீன்றதாய்காணிவளோ டம்புலீயாடவாவே. (அ)

குறைவடிவினோடுசிவ லோகத்தியாகர்தங் கோடீரமாமுடிக்கட் - குலவுகங்கையின்மூழ்கி யவ்வடிவமேவுற்றுது குறையாதிருத்தல் பெற்றாய், நிறைவடிவினோடிங் கடைந்துகங்காகூப நிறைபுனலின் மூழ்கினினைய - நிகழ்வடிவமொருதன்மை யாய்மருவவுருவவள நிமலையருள் பெறுவதுண்மை, பொறைவடிவம் வாய்ந்துவினை காய்ந்துமலமாய்ந்தொளிர் புகழ்த்தரும நெறியினிற்போர்- பொருவருமனப்பெருங் கோயிலகமேவியெம் புந்திக்குமந்திக்குமோ, ரறைவடிவமேவிய திருப்பெரு மணத்துமையோ டம்புலீ யாடவாவே- யலகில்புவனங் கண்முற் றீன்றதாய்காணிவளோ டம்புலீ யாடவாவே.

வாவென்றபோதுவா ராதுபாணித்ததெம் மதிகதி யுனக்குவேறென் - மற்றிவடவர்க்குமுடி முதலடிவரைக்குமுள வாளராத்தொகை கணக்கில், சோவென்றநசையுண்டு தக்கன்வேள்விக்களங் தோய்ந்ததாளுண்டுநின்னேர் - சுடர்நகைதகர்த்தசெங் கரமுண்டுமாரற்றெலைத்தவிழி யுண்டுகண்டாய்,காவென்றகைத்தலத்திவண்முனிவுசெயினினைக் காப்பவருமிலரிவையெலாங் - கருதிவந்தருள்பெறுதி கடலுலகமுழுவது மகட்டிற் கலக்குமாவா, யாவென்றவன்புகழ் திருப்பெரு

மணத்துமையோ டம்புலீயாடவாவே-யலகில்புவனங் கண்முற் றீன்றதாய்காணிவளோ டம்புலீயாடவாவே.

அம்புலிப்பருவ முற்றியது.

அம்மானைப்பருவம்.

சொல்லூர்வயத்தசிவ லோகத்தியாகர்தந் தோட்டுணை குழைக்கநாளுந் -தோலாதெழுந்தநின் றுணைமுலைக்குவடுநேர் தோற்றியெழு தோற்றநோக்கி, வில்லூர்நெடுஞ்சிகர மேருவென் றுனைசெய்வட வேதண்டமுற்றகொற்ற - வீறுமுற் றுந்தபப் பொடிசெய்து கடிசெய்து மேவுபலுருண்டையாக்கி, யெல்லூர்மணிக்கங்க ணக்கரத்தேந்திமே லெறிவதுகடுப்பவறமுற்-றேறு மங்கைத்தலத் துறுசிவப்பேறுவதை யெண்ணுது விண்ணுடைளா, மல்லூர்பொழிற்பெரு மணத்தமர் பராபரைபொன் னம்மானை யாடியருளே- யருளினெங்குடிமுழுது மடிமைகொண்டருளுமுமை யம்மானை யாடியருளே. (க)

மறமணக்குங்கனன் மழுப்படைத்தம்பிரான் மலர்பொரு திருக்கையுலகம்-வாழ்தரக்கோத்துமவ் வுலகமஞ்சாதுய்ய வரதாபயங்கொடுத்து, நிறமணக்குந்தருமமுப்பத்திரண்டுநனி நெடுநாளு மமரவைத்து-நிலவுஞ்சிருக்குமணி வடநேமிவளைசூல நிலவுவே றுங்கிழுவர், புறமணக்குந்தொழிற் கேதுநீயென்பது புலப்படு

த் தியுமொளிருநின் - பூங்கரட்புகழ்திரண் டொன்றன் பினென்றுமேற் போயடைய வெழுவதொப்ப,வறமண க்குந்திருப் பெருமணத்தம்மைமுத் தம்மானை யாடிய ருளே - யருளினெங்குடிமுழுது மடிமைகொண்டருளு முமை யம்மானை யாடியருளே. (௨)

இறைதிருமுகத்தகத் துந்திருநுதற்கணு மிலங்கு முச் சுடருநோக்கி-யிருளப்பொலிந்தந மிருங்குழற்கெ திராவ திவ்விருள்கொ லெனமுனிந்து, கறைமருவுபூத விருண் முழுதுங்கலங்கக் கலக்கித்துவைத் தவைத்து க்-கச்சமிலுருண்டையாச் செய்துநீவாய்ப்பெயுங் கவள மிவை கோடியென்ன, நிறையவெளியாயகா னுலவுக ரமதழுமிழ் நெடுங்கதிர்க் குஞ்சரத்தி - னேர்செல்லவீ சுதல் கடுப்பவெதிர்காண்குநர் நிலாவுபொன் னுலக மென்றே, யறைதருதிருப்பெரு மணத்தம்மைமாநில வம்மானை யாடிருளே - யருளினெங்குடிமுழுது மடி மைகொண்டருளுமுமை யம்மானை யாடியருளே. (௩)

பன்னரியதிருமறைச் சிரமீதுமருவும் பரம்பொ ருடனைப்பகர்ந்து - பங்கயச்செங்கையமர் பைஞ்சிறை க்கிள்ளைமீப் பலகாற் பறந்தெழுந்து, நன்னயமிகுந்தத் திருக்கரத்துறைவதென நாட்டத்தெழுந்த பார்வை- நக்கபேரன்பர்பாற் செல்வதுகடுப்பநனி நாடிமேற்செ ன்றுலாவ, வன்னமிகுவெண்டரள மணிவடஞ்சூழ்ந்த மணி மாமுலைகுலுங்க நுழைநுண் - மருங்குலையெடு த்தெடுத் துந்திநிறைநீர்த்தட மலர்ந்ததாமரை மலர்

தொறு,மன்னமருவும்பெரு மணத்தம்மைமரகதத் தம்மானை யாடியருளே - யருளினெங்குடிமுழுது மடிமைகொண்டருளுமுமை யம்மானை யாடியருளே. (ச)

கருகாதபத்திமை கொழுந்துகொண்டெழவுட் கசிந்துருகு மன்பர்நிதியே-கருதுபொழுதாறுமலர் மாலைசந்தாதிபல கைக்கொண்டு பூசையாற்றும், பெருகாதகாமத்தர் செல்வமேமாதவப் பெரியோர்கள் பெற்றபேறே - பிழையறப்பாமாலை பெருநயமுறப்பாடு பெற்றியோருற்றவாழ்வே, திருகாதசிந்தைகொடு சகமுழுதுநீயெனத் தேர்ந்துணர்ந் தாரின்பமே - தெள்ளமிர்தமேயினிய கனியேதெவிட்டாத தேனேயறங்கணுளு,மருகாதநற்பெரு மணத்தளிவிளக்கமே யம்மானையாடியருளே - யருளினெங்குடிமுழுது மடிமைகொண்டருளுமுமை யம்மானை யாடியருளே, (ரு)

வேறு.

அன்னமலிதண் டுறையுமணங் கனையார்மொழியும் பானலமோட்-டாமையுறங்கும் வாவியுமற் றனையார்முலையுங் கோகநக, முன்னவினிய பொழிலுமவர் முடிக்குங்கூந்தற் பகுப்புமஞ்சு-முகிறேய்மதிலோ வமுமனையார் முழுமேனியுநல் லஞ்சுவணம், பன்னமுடியாமனையுமவர் பாதத்தணியுஞ் சிலம்புநெடும் - பழனமெங்கு மத்தகைய பாவைமாருஞ் செஞ்சாலி, யென்னவளங்கூர் பெருமணப்பெண் ணெடுத்தாடுகபொன் னம்மனையே-யெங்கள்குடிக்கோர் வாழ்முதல்கை யெடுத்தாடுகபொன் னம்மனையே. (௬)

காலாதரிக்குங் கழனிதொறுங் கமஞ்சூலுயிர்ப்ப வயிறுளைந்து-காண்டற்கினிய சலஞ்சலநீர் காலுமடைவாய் முத்துகுப்பக், கோலவொளிரவ் வெண்டரளக் குவையாலடைபட் டறநேங்கக் - குலவவிளைந்த செஞ்சாலிக் கொடுவண்கதிர்மூழ் கும்பொழுது, மாலாவெழுவெள் ளோதிமந்தம் வயங்குசினையென் றவைகவர்ந்தம் - மடையைத்திறந்து பெருகியநீர் வடியச்செயலாற் பலருவக்குந், தோலாவளமை நல்லூராய் தொட்டாடுகபொன் னம்மனையே - சூழும்பிறவி யெனக்கொழிப்பாய் தொட்டாடுகபொன் னம்மனையே. (எ)

மதிக்குங்கடவுட் பஞ்சதரு வயங்குநிழலில் வீற்றிருந்து - மாறுக்கருவி பலகொண்டு வண்டலாடு மடவாருந், துதிக்குமருத நன்னிழலிற் றூலிற்கிடத்தியிளங்குழவி - துஞ்சவுறக்கிக் களைகடியுந் தொழின்மேற்கொளமே வரிவையரும், பதிக்கும்பயமுட் புகக்கொண்டு பலகாலிரிய மேலெழுந்து - பற்றுங்கொடிய கழுக்கடைபோற் பாய்ந்துபாய்ந்து பருவாளை, குதிக்கும்புனனல் லூரமுதே கொண்டாடுகபொன் னம்மனையே-கோலம்பொலிவெண் ணீற்றுமையே தொண்டாடுகபொன் னம்மனையே. (அ)

ஆண்டாதரித்து நாயேனை யல்லற்பிறவி யறுத்தருளு - மருளானந்தக் கடற்பிறந்த வளவாவின்பச் சுவையமுதே, யீண்டார்கலிசூழ் புடவிமுத லெப்புவனத்து முறையுயிர்க - ளெல்லாம்பிறவிப் பிணியறுமா

றிமையமுயிர்த்த வருமருந்தே, வேண்டார்நிற்கு மெய்யடியார் விரும்புமுள்ளக் கோயிலகம் - விருப்பறுது நாளுளு மேவியமர்சிந்தாமணியே, தூண்டாவிளக்கே நல்லூராய் தொட்டாடுகபொன் னம்மனையே - தோன்றுத்துணைக்கோர் துணையானுய் தொட்டாடுகபொன் னம்மனையே. (௯)

குணத்தேபொலியு மெய்யடியார் கோலம்பொலியுங் குளிர்சிந்தைக் - கோயில்பொலியு மாறுகுடி கொண்டுபொலியுங் கோமளமே, யணத்தேர்வரிய மறைமுயன்றுமணுகற்கரிய பேரொளியே - யறிவிலார்க்கு முனிவரிதா யள்ளூறினிய பசுந்தேனே, கணத்தேமலர் செற்றியபொழிலிற் கனிந்ததேமாம் பழச்சாறு-கால்கொண்டோடிக் கடல்புகுந்து கழியாவுவளைக் கடத்துபெரு, மணத்தேயமர்வெண் ணீற்றுமையே மகிழ்ந்தாடுகபொன் னம்மனையே - மலையிற்பிறந்த மடப்பிடியே மகிழ்ந்தாடுகபொன் னம்மனையே. (௧0)

அம்மானைப்பருவ முற்றியது.

நீராடற்பருவம்.

எள்ளுதற்கரியகுழல் சைவலமெனச்சுழல விணைவிழிகள் சேலினிலக - வெழில்வளர் குழைச்செவிகள் வள்ளையிற்பொலியமுக மிலகுதாமரையின்மலர, வுள்ளுதற்கரியவிரு கொங்கையும்புற்புதத்தொளிரமலருந்

திசுழியி - னுறமூழுந்தாளலவ னிற்கவினமற்றுளவு றுப்புமொவ்வொன் றினிகழுக், கொள்ளுதற்கரியவொ ளி வயிரமுந்தரளமுங் குருமணியுமொலிதிரைக்கை - கொண்டிருகரைக்கணு மெறிந்தரம்பைச்செழுங் கூன் குலைமுறித்துமிகழும், விள்ளுதற்கரியவொரு கொள் ளிடத்திருநதியின் வெள்ளநீராடியருளே - விண்ணேத் துசிர்மேவு வெண்ணீற்றுமாதேவி வெள்ளநீ ராடிய ருளே. (க)

புள்ளாறுகாலுழக் குங்குழலனிந்திதை பொருங் கணையனுக்குமொண்கட்-பொற்புமலிகமலினிமுதற்றேு ழிமார்பலர் புரிந்துசூழ் நிற்பநடுவ, னுள்ளாறுபகையற வொழித்தமாதவருளத் துள்ளொளிய தாகிநாளு - மு றைபராபரைநின்று செவ்வாய்விளர்ப்பவரி யுறுகருங் கண்சிவப்ப, நள்ளாறுபழையாறு கஞ்சாறுகோட்டா று நல்லாறுதருமையாறு-நாவலாறேழுகுவட மேருமு ற்பலதே நயந்தவர் சடைக்குமஞ்சா, வெள்ளாறெனப் பரவுகொள்ளிடத்திருநதியின் வெள்ளநீ ராடியருளே விண்ணேத்துசிர்மேவு வெண்ணீற்றுமாதேவி வெள்ள நீ ராடியருளே. (உ)

முண்ணுறுபங்கயச் சேக்கையமரொருநான் முக ப்பிரம னுவுமோவா- முரண்மிக்கமுரனுயிர் முருக்குமு ழுவலியுடை முகுந்தனகன் மார்புமேவு,பண்ணுறுமொ ழிமாத ரிருபாலுநின்றுதம் பங்கயச்செங்கையுதவப்-ப ற்றுபுசிலம்பொலித் திடநடந்திடுகிடைப் பட்ட றலு

ணையயின்று, கண்ணுறுசொன்றையுந் தும்பையும்பா
சொளிக் காமராறுகுங்கமழ்ந்து - ககனத்துலாம்பிறை
ச் சிறுமதியைவெண்டிணக் கையால லைத்துவரலால்,வி
ண்ணுறெனப்பரவு கொள்ளிடத்திருநதியின் வெள்ளநீ
ராடியருளே - விண்ணேத்துசீர்மேவு வெண்ணீற்றுமா
தேவி வெள்ளநீ ராடியருளே. (ரு)

பாலைநிகர்சொற்பலமி ஞர்தகவடித்தவினை பான்
மையினெடுத்து தவநீள்- படைவிழிக்கமலமட வார்தங்
கைகொண்டுநின் பசுமேனியிற்றிமிர்ந்து,சோலைமயிலொ
த்தவிய லாயருள்விளக்கியெந் தொல்வினைக் கழிவுதோ
ன்றச் - சூட்டோதிமத்தினின் றினிதாடுவாயென்று
தொலைவின்முக மன்பலசொல, மாலைமதிவைத்தமுடி
யாரொடுபகைத்ததென மதமலையெடுத்தடுத்து - வரு
மீனம்வாய்க்கொள வெறிந்துவிடமுன்றந்த மாபாதகந்
தெரிந்தவ், வேலையையுடைக்குமொரு கொள்ளிடத்தி
ருநதியின் வெள்ளநீராடியருளே- விண்ணேத்துசீர்மே
வுவெண்ணீற்றுமாதேவி வெள்ளநீ ராடியருளே. (சு)

பற்றியரமாதர்முத லாயபலமாதரும் பன்மலர்க்
கொடியினின்று - பணிதலைக்கொள்ளவவர் நாப்பணு
ருடைங்கொடிப் பண்பினுலகேத்த நின்று, முற்றியறி
யாதமுலை முத்தமோடெதிர்வருவெண் முத்தமிக்குற
வுகொள்ள - முரிநுசுப்பணியுமே கலைமணியினேடுபன்
முழுமணியு மளவளாவச், செற்றியகடுக்கைமலர் சூடி
மானேந்தியெண் டிசைநடுங்கரவத்தொடு - சினக்கோ

லவெண்மருப் புப்புனைந்தடுபுலிச் சிறுதோல் விரித்து டுத்து, வெற்றிவிடையானில்வரு கொள்ளிடத்திருந தியின்வெள்ளநீராடியருளே - விண்ணேத்துசீர்மேவு வெண்ணீற்றுமாதேவி வெள்ளநீ ராடியருளே. (௫)

வேறு.

உன்னுமனவாக் குடன்மூன்று மொன்றுதுடற்ற லொழிதரவுள் - ளுருகியுருகி நெகிழ்ந்துநெகிழ்ந் து டையுமிடையும்பேரடியார், துன்னுமுழுவற் பொன்பி ற்றுளைந்துதுளைந்தா டுதல்பொருவத் - தோன்றுத்து ணைக்கோர் துணையாய சூட்டோதிமமேநடுநின்று, ம ன்னுந்தனக்குத் துணையாகி வன்காப்பியற்றும் பெருங் குலைக்கு - மகிழ்ந்துகொடுக்கும் பரிசென்ன மருங்கு முளரிக் கைநிறையப், பொன்னுமணியு மெறியும்வட பொன்னிப்புதுநீராடுகவே - பொற்பார்மணவை யம் மைவட பொன்னிப்புதுநீ ராடுகவே. (௬)

சேலேபொருவப் பிறழ்கருங்கட் செவ்வாய்வெ ண்பற் றேழியருட் - செய்யவெளிய மடமாதர் தெண் ணீர்முழுகிச் சிலம்பணிபூங், காலேவருட வெளிசெய்த வர் கமலமுகத்தின் முகந்ததுணைக் - கைநீர்கடுகி யிறை ப்பநறுங் கங்காசலமென் றுன்னுபுதீம், பாலேபுரை சொலனையர்சிரம் பரவக்கவிழ்ப்ப வனையுதித்துப் - பல வாமுயிர்ப்பைங் கூழ்தழையப் பண்ணித்தண்மை வாய் ந்துமினைப், போலேசிறப்ப நிகழும்வட பொன்னிப்புது நீராடுகவே - பொற்பார்மணவை யம்மைவட பொன் னிப்புது நீராடுகவே. (௭)

தென்னங்குரும்பை யனையமுலைச் செவ்வாய்க்க ருங்க ணரமாதர் - தேம்புநுழைநுண் ணுசுப்பொசியத் தெற்கும்வடக்குந் திரிந்துலவ, வன்னங்குலவு மொலிச் சிலம்பி னனிச்சமருட்டு மடிகள்பெயர்த் - தம்பொற்சி விறி பந்துகள்கொண் டவர்மேன்முகந்து நறும்புனறா யின்னம்பிறவிக் கடலழுந்த லெங்கட்கியல்போ வருள் பொழிவா - யென்பாரின்பார் கடன்மூழ்கி யென்றுமா டவினிதாட்டும், பொன்னங்கொடியேநெடியவட பொ ன்னிப்புது நீராடுகவே - டொற்பார்மணவை யம்மைவ ட பொன்னிப்புதுநீ ராடுகவே. (அ)

வேறு.

நீடுநலாகம மோதியவாறருள் புல்லாராயினுநன்- னேயமருததோர் ஞானமுளார்மன முள்ளால்வாழ்மயி லே, பாடுநலோனிவ னுருவனேவென வெள்ளாதேய டியேன், பாடுபல்பாடல் விராவியதார்புனை பொன்னே கோமளமே - யாடுநலார்மதி யாள்சடையார்மலை வில் லார்மேனியினே, ராகியபாதியில் வாழ்குயிலேவவா மி ன்னேயூர்பலவு, நாடுநல்லூரமர் வாய்வடகாவிரி நன் னீராடுகவே - நான்மறைமேகலை யாய்வடகாவிரி நன் னீராடுகவே. (கூ)

பூமகணுமக ளாதிமினுர்தொழு பொன்னேகோகி லமே - போதமுறுவெளி யேனவில்பாடலு மெள்ளா தேபுனைவாய், தேமருமாலைய ளாவியவார்குழ னல்லா ய் கார்மயிலே—தேவர்பிரானியன் மேனியிலோர்பயல் வி

ள்ளாதேபொலிவாய், காபருசோலையு ணீர்நிறைவாவி யி னெல்லேகூர்செறுவிற் - காலில்விராவிய வோடையி னீள்கயல் புள்ளராராய்வளனூர், நாமநல்லூரமர் வாய்வ டகாவிரி நன்னீ ராடுகவே- நான்மறைமேகலை யாய்வட காவிரி நன்னீராடுகவே. (க0)

நீராடற்பருவ முற்றியது.

பொன்னூசற்பருவம்.

கொன்செய்தவயிரக் கொழுங்கானிறுத்தியொளி கூர்பவள விட்டமிட்டுக் - குளிர்மருவுநித்திலத் தொ டர்பூட்டிநவமணி குயிற்றுபொற்பலகைமாட்டி, மின் செய்தசிற்றிடைப் பெருமுலைக்கோகனக மீதுமொண் புண்டரீக - மீதுமுறைமாதரிரு பாலுநின்றூர்வடம் வி ரும்புதங் கைகள்பற்றத், தென்செய்ததமிழ்முனியை யெண்ணுதுமீட்டுஞ் சிலம்பெழுந்ததுகொலென்று-செ ங்கதிரும்வெண்கதிரு நின்றுன்னியுள்ளந்தி கைப்பவா ன்கிண்டெழுந்து, பொன்செய்தமதில்சூழ் திருப்பெரு மணத்தம்மை பொன்னூசலாடியருளே - பொருவின்ம ந்திரசொரூ பத்தனிவிமானத்தி பொன்னூச லாடிய ருளே. (க)

தேமண்க்குங்குழற் செய்யவாய்வெண்ணகைச் சேல்விழிப் பனுவலாட்டி - தினாவீசு சுவையமு தொழுக்கியதுபோன்மெனத் திருவூசலினிதுபாட ப், பாமணக்கும்புகழ்ச் செஞ்சடைத்தம்பிரான் பா

ர்த்துளத்துவகைபூப்பப்-பல்லாயிரங்கோடி யண்ட முமவற்றுள்ள பலசராசரமுமாட, வாமணக்குங்க ரு முகிற்படாங்கீண்டுமே லாயவுலகம்புகுந்தாங் - கமர்வார்செழுங்கற்ப கத்திினின்றும்பிரித் தறிதரா வண்ணநாளும், பூமணக்கும்பொழில் வளப்பெரு மணத்தம்மை பொன்னூச லாடியருளே - பொருவி ன்மந்திரசொரூ பத்தனிவிமானத்தி பொன்னூச லாடியருளே: (உ)

கொங்குமலிதேமாந் தளிர்ப்பொழினடுக்கண மர் கோகிலப்பேடுபொருவக் - கோகனகராகமணி யேசுற்றுமுற்றுங்குயிற்றுபொற்பலகையேறிச், செ ங்குமுதவாயர மடந்தையர்விளைக்குமலர் செங்கை நிறையக்கொண்டுநின் - றிருமுனர்த்தூவுபு குடந்த முற்றகலாது சேவித்துவந்துநிற்கச், சங்குபலவெ ங்குங் கரும்பரம்பைக்குலஞ் சாலியாயுறலுணர்ந்து தாவாதவேதனை யொடுந்தவழ்ந்தேறியங் தாமரையி ன்முத்துயிர்க்கும், பொங்குபுனல்வாவித் திருப்பெ ருமணத்தம்மை பொன்னூச லாடியருளே- பொரு வின்மந்திரசொரூ பத்தனிவிமானத்தி பொன்னூச லாடியருளே. (ங)

மேலாயசத்துவ மெனப்பகர்குணத்துநடு வீற் றிருந்தருளலென்கோ - மெய்யடியார்முன்செல நடா த்துவானேதிம மிசைப்பொலிந்தமர்வதென்கோ, நாலாயமறைபுகழும் வெள்ளிவெண்கயிலைவரை நா

ப்பணமர் தோகையென்கோ, நானென்றுகலைமகள் வியந்துபாடச்சுரர் கணங்கள்கண்டுவகைநீடப், பாலாயவொள்வயிர முற்றுங்குயிற்றகன் பலகையினிவர்ந்திருந்து- பைம்பொன்செய்கோபுர மெழுந்தொளிபரப்பியிருள் பாற்றிவட மேருவெற்பைப், போலாயவளமைத் திருப்பெருமணத்தம்மை பொன்னூசலாடியருளே – பொருவின்மந்திரசொரூ பத்தனிவிமானத்தி பொன்னூச லாடியருளே. (ச)

கயறங்குநின்றிருக் கட்கடையுதித்துமிசை காணப்பரந்தெழுந்து - கருதுவாரிருவினை மரங்கள்கால்சாயவலை கான்றனையர்பிறவிவாரி, மயறங்குவன்கரையு டைந்தடியறப்பொங்கும் வான்பெருங்கருணைவெள்ளம் - வற்றுதுநின்கைக் கடைப்பிறந்தெழுவெள்ள மனமஞ்சியுட்கிவட்கி, யயறங்கு மொருதிவலையாகப்பிரவாகமுற் றகிலநிகிலமும்விராவ - வமராபதிக்கற்ப கத்தோடமர்க்குமத கற்றுவான்மேற்படுத்துப், புயறங்குசோலைத் திருப்பெருமணத்தம்மை பொன்னூச லாடியருளே-பொருவின்மந்திரசொரூ பத்தனிவிமானத்தி பொன்னூசலாடியருளே. (ரு)

நன்னயம்விராவியுள நெக்குநெக்குருகுநர்நயக்குநின்றுமலைத்தா-ணகுபொழிற்பிண்டியையுதைந்தாடுதொறுமது நகத்தளிர்த்தினிதுபூத்தல், பன்னயம்விராவுமச் சிற்றடிப்பெருமையுட் பதிதரவுணர்ந்துபூசை- பண்ணுவானிற்குநிலை காட்டவதுகண்

டவை படுந்தொறு மருக்கமலர்தூ; மின்னியல்பி
ரான்சடைய மூக்காறுமேவநன் மேகமுமுடுக்கூட்
டமும்- விராவியதெனக்கா ரடைத்திரளரும்புகள்
விளங்கச்சுமந்துசூழ்ந்த, புன்னையங்கானற் றிருப்
பெருமணத்தம்மை பொன்னூச லாடியருளே- பொ
ருவின்மந்திரசொரூ பத்தினிவிமானத்தி பொன்னூ
சலாடியருளே. (கூ)

ஆதாரபங்கயந் தொறும்வன்னரூபியா யமர்வ
துங்கருணையேமெய் - யாயபெருமான்பெறற் கரிய
வாமத்திலினி தமர்வதுங்கருணைமிகையாற், பாதார
விந்தம் பதித்திருங்கயிலைமுற் பஃறலத்தமர்வது
ம்விடார் - பற்றினருள்ளகத் தமர்வதும் பொரவொ
ளி படுந்துகிர்ப்பலகையினமர்ந்,தோதாரம்வில்லிட
க்குறுமூரனில்வெழ வுறுங்கருணைபொங்கச்சிறை-
யோதிமஞ்சிறையிலோ திமநிகரவினைதேர்ந் துறு
ங்குறிப் பிற்கமலமென், போதாரவமருந் திருப்பெ
ருமணத்தம்மை பொன்னூச லாடியருளே - பொரு
வின்மந்திரசொரூ பத்தனிவிமானத்தி பொன்னூச
லாடியருளே. (எ)

வலியவரனுலமரர் வானகங்கூட்டுண்டு மகிழ்
முரட்சூரனிளவன் - மக்களொடுவாழ்கின்ற பேரில
ழியச்சிற்றின் மறுகூடுலாயழித்தும், கலியவவன்வா
ய்தற்பெரும் பறைமுழக்கறக் காமர்சிறுபறைமுழக்
கங் - கண்டுமெவனூருமிங் திரஞாலமென்றுணா கதிர்

ப்பொலந்தேருருளுரு, தொலியசிறுதேரினி துருட்
டியும்விளையாடு மொண்சதங்கைச்சிறியதா - ளொ
ருகுழவியைத்தனி யுவந்தெடுத்துப்புல்லி யொண்
மணித் தொட்டிலேற்றிப், பொலியவினி தாட்டுந்தி
ருப்பெருமணத்தம்மை பொன்னூச லாடியருளே-
பொருவின்மந்திரசொரூ பத்தனிவிமானத்தி பொ
ன்னூச லாடியருளே. (௮)

ஆதரம்பெருகக் கசிந்துநெக்குருகுபழ வடியர்மன
மாயதூய-வாலயத்தினிதமர்ந் தாடுதலையொப்பமுத் த
விர்செழும் பலகையேறிக், காதரங்கடையேங் கழிந்து
ய்யவெவ்வினை கழீஇப்பொங் கிடுங்கடைக்கட்- கருணை
வெள்ளம்பெருக வெம்பிரான்சடைமுடிக் கங்கைவெள்
ளஞ்சுருங்க,மீதரம்பையரமர ரொடுகீழிறங்கவகன் மே
தினியுள் ளாரவ்வாறு - மேலேறவைத்தநெட் டேணி
யேயாமென விளங்குகோ புரம்வடாது, பூதரம்பொ
ருவுந் திருப்பெருமணத்தம்மை பொன்னூச லாடியரு
ளே - பொருவின்மந்திரசொரூ பத்தனிவிமானத்தி
பொன்னூச லாடியருளே. (௯)

அற்புமலியுள்ளம்பு கும்பரிபுரத்தாளு மறைவி
லையி லாதசெம்பட்-டாடைபுனைமேகலை மருங்குலுநெ
ருங்குபே ரண்டமுற் றீன்றவயிறும், வற்புமலியரனா
ன மூறுமிருகொங்கையும் மங்கலம் பொலிகழுத்து-
மாறுதிரண்டுதலை யிட்டமுப்பஃதறமும் வளர்பங்கய
ச்செங்கையும்,வெற்புமலியசுவேய் சவட்டுமிருதோளு

மிள வெண்டூரலுஞ் செவ்வாயு - மிளிர்குழையுமலர் முசமு மணிநாசியுங்கருணை விழியுங் கருங்கூந்தலும் பொற்புமலியப்பொலி திருப்பெருமணத்தம்மை பொன்னூச லாடியருளே - பொருவின்மந்திரசொரூ பத்த னிவிமானத்தி பொன்னூச லாடியருளே. (கo)

பொன்னூசற்பருவ முற்றியது.

திருப்பெருமணநல்லூர்த்

திருவெண்ணீற்றுமை பிள்ளைத்தமிழ்

முற்றியது.

அம்புலிப்பருவத்தில் முதல் மூன்று செய்யுட்களின் ஈற்றடியில் (அகில) என்றதை (அலகில்) என மாற்றிக்கொள்க.